# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்





## 01-12-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

### தலைப்பு : யாப்பிலக்கணமும் செய்யுளும்

### தொடக்கவுரையாடல் : ஜின்னா ஷரிபுதீன்

யாப்பு பிற்காலங்களில் வந்தது. கவிதைதான் முதலில் வந்தது. நாட்டுப்பாடல்களிலும் சாதாரண மக்களின் அழகியல் மிக்க பாடல்களிலும் செய்யுள் யாப்பின் அழகிய கூறுகள் அமைந்திருக்கின்றன. ஆனால் அப்பாடல்கள் செய்யுள் யாப்பின்படி எழுதப்பட்டவை அல்ல.
மொழி தோன்றிய பிறகு, மக்கள் மொழியைப் பயன்படுத்தும் முறையைக் கற்றுக்கொண்டு இலக்கணம் வகுக்கப்பட்டதைப் போன்று, மக்கள் மத்தியில் வழங்கிவந்த பாடல்களின் இயல்புகளை அவதானித்துச் செய்யுள் யாப்பு வகுக்கப்பட்டது.

செய்யுள் யாப்பானது **எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை** ஆகிய கூறுகளைப் பற்றி இலக்கணம் வகுக்கிறது.

எழுத்து எனப்படுவது அனைவரும் அறிந்த விடயம். தமிழில் உள்ள உயிர், உயிர்மெய், மெய், ஆய்த எழுத்துக்களை இது குறிக்கிறது.

எழுத்துக்கள் இணையும் போது அசை பிறக்கிறது. இது நேரசையாகவும் நிரையசையாகவும் அமைகிறது. எடுத்துக்காட்டாக **தேர், தீ, கண்** போன்றவை **நேரசைச்சொற்கள். வரி, நிறம்** பொன்றவை **நிரையசைச்சொற்கள்.** நேரசைச் சொற்களைச் சொல்லும் போது "நேர்" என்று சொல்கையில் உருவாகும் ஓசை உண்டாகும். நிரையசைச்சொற்களைச்சொல்லும்போது "நிரை" என்ற சொல்லைச்சொல்கையில் உருவாகும் ஓசை உண்டாகும்.

சீர் என்பது அசைகள் இணைவதால் உருவாகுவதாகும். எடுத்துக்காட்டாக, **"வாணிபம்"** என்ற சொல்லை அசை பிரிக்கையில் **வா|ணிபம்** எனப்பிரிகிறது. இதில் **நேர்|நிரை** எனும் அசைகள் உள்ளன. எனவே வாணிபம் என்ற சொல் இரு அசைகளைக்கொண்ட "சீர்" ஆக உள்ளது. **"விஞ்ஞானம்"** என்ற சொல், **விஞ்|ஞா|னம்** என அசைபிரிந்து **நேர்|நேர்|நேர்** என வருகிறது. இதில் மூன்று அசைகள் உள்ளதால் மூவசைச்சீராகிறது.

சீர்கள் இணைவதற்கான இலக்கணமே "தளை" எனப்படுகிறது. நேரச்சுருக்கம் கருதி இந்த உரையாடலில் தளை பற்றிய விளக்கங்கள் தவிர்க்கப்பட்டன.

யாப்பிலக்கணப்படி எழுதப்படும் செய்யுட்களுக்கு "ஓசை" வேறுபாடு உண்டு. ஓசை அல்லது தூக்கு என்பது செய்யுளின் ஒரு கூறு எனத் தொல்காப்பியம் கூறுகிறது. செய்யுள்கள் அல்லது பாக்கள், அவற்றின் சீர்களுக்கு இடையேயுள்ள தளைகளின் தன்மையையொட்டி, வெவ்வேறு விதமான ஓசைகளை உடையனவாக இருக்கின்றன. முக்கியமாக இவ்வோசை வேறுபாட்டின் அடிப்படையிலேயே பாவகைகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன.ஓசைகள் நான்கு வகைப்படுகின்றன. அவை, செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்பனவாகும்.

வெண்பா செப்பலோசையையும் ஆசிரியப்பா அகவலோசையையும் கலிப்பா துள்ளலோசையையும் வஞ்சிப்பா தூங்கலோசையையும் கொண்டிருக்கும்.

இன்று யாப்பிலக்கணப்படி அல்லாமல் ஓசை நயத்துக்கு எழுதப்படும் கவிதைகள் எல்லாம் பெரும்பாலும் அகவலோசை உடையனவாகவே உள்ளன. புதுக்கவிதைக்குள்ளும் பல யாப்பிலக்கணக்கூறுகள் இயல்பாகவே அமைகின்றன.

கலந்துரையாடலின் போது செய்யுட்கள் அசை பிரித்துக் காட்டப்பட்டன. குறள் வெண்பா ஒன்று பின்வருமாறு அசைபிரிக்கப்பட்டது:

**கற்|க கச|டறக் கற்|பவை கற்|றபின்**
**நிற்|க அதற்|குத் தக**

**நேர்|நேர் நிரை|நிரை நேர்|நிரை நேர்|நிரை**
**நேர்|நேர் நிரை|நேர் நிரை**

ஆங்கிலத்தில் செய்யப்படும் அசைபிரிப்புக்கும் தமிழ் செய்யுள்களில் பயன்படுத்தப்படும் அசைபிரிப்பு முறைக்கும் இடையில் வேறுபாடு உண்டு. இரண்டும் ஒன்றல்ல.

செய்யுட்களைப் பகுப்பாய்வு செய்யும் மென்பொருட்கள் பற்றி மு. மயூரன் கருத்துரைத்தார். அதில் "அவலோகிதம்" என்ற மென்பொருளைப் பயன்படுத்தி செய்யுளொன்றைப் பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டது. அவலோகிதம் (virtualvinodh.com/avalokita) மென்பொருளானது இணையத்தளத்தில் இயங்குவதாகும். அதனைப்பயன்படுத்தக் கட்டணங்கள் எதுவுமில்லை. அதுவொரு கட்டற்ற திறந்தமூல மென்பொருளுமாகும். செய்யுள் ஒன்றை உள்ளிட்டால், அச்செய்யுளில் உள்ள எழுத்து, அசை, சீர், தளை, மோனை, எதுகை போன்றவற்றை எல்லாம் பகுப்பாய்வு செய்து புள்ளிவிபர அடிப்படையில் துல்லியமான அறிக்கையை அம்மென்பொருள் தரும். கூடவே பாவினம் எது, பாவகை எது என்பதையும் கண்டறிந்து சொல்லும்.

இக்கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, செய்யுள் இலக்கணம் தொடர்பான செயலமர்வு ஒன்றினை நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**சமூக நீதிக்கான வெகுஜன இயக்கத்தின் தேவை**
08-12-2011 | சோ. தேவராஜா

**கண்ணிவெடி அகற்றும் தொழிநுட்பங்கள்**
15-12-2011 | ச. சுதாகர்

**தமிழில் ஒலி நூல்களை உருவாக்குதல்**
22-12-2011 | மு. மயூரன்



பாபாசாகேப் டாக்டர் அம்பேதகர் (Bhimrao Ramji Ambedkar) மகாராஷ்டிர மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில் அம்பாவாதே என்னும் கிராமத்தில் 1891 ஏப்ரல் 14 அன்று ராம்ஜி - பீமாபாய் ஆகியோரின் 14-வது குழந்தையாகப் பிறந்தார். மகர் என்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர். .டாக்டர் அம்பேத்கர் மிகச் சிறந்த கல்வியாளர்.
வர்ணாசிரம தருமத்திலிருந்து தோன்றிய சாதிய அமைப்பையும், தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்து டாக்டர் அம்பேத்கர் தீவிரமாகப் போராடினார். இறுதியில் 1956-ல் தமது ஆதரவாளர்களுடன் புத்த மதத்தில் இணைந்தார். இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசன உருவாக்கக்குழுவின் தலைவராகவும் செயற்பட்டார். 1951-ம் ஆண்டு "இந்து சட்டத் தொகுப்பு மசோதா" அறிமுகப்படுத்தப்பட்டபொழுது அதனை எதிர்த்து தனது சட்ட அமைச்சர் பதவியைத் துறந்தார். சமூக நீதிப் போராளி டாக்டர் அம்பேத்கர் 1956 டிசம்பர் 6-ல் காலமானார்.

"நான் யாருக்கும் அடிமை இல்லை எனக்கு யாரும் அடிமை இல்லை"

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## சமூக நீதிக்கான வெகுஜன இயக்கத்தின் தேவை

(இந்த வாரம் இடம்பெறவுள்ள உரையாடலுக்கான முன்வரைவு.
(சோ. தேவராஜா)

1. சமூக நீதி என்றால் என்ன?

2. வெகுஜன அமைப்பொன்றின் தேவை

3. வெகுஜன அமைப்பொன்றைக் கட்டியெழுப்பும் வழிமுறைகள்

4. அமைப்பு, நிதி, யாப்பு, பதிவுகள்

5. மக்கள் நிதியம்

6. சமூகத்தில் நாம் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினை இனம் காணல்.




Occupy Wallstreet போராளிகளுக்கு எதிராக முதலாளி ஊடகங்களால் செய்யப்பட்டுவரும் பிரசாரத்தை விமர்சிக்கும் கேலிச்சித்திரம். I Acknowledge Class Warfare Exists எனும் facebook குழுமத்தினரால் பகிரப்பட்டது.




இந்த மாதப் "பாடிப்பறை" நிகழ்ச்சி எதிர்வரும் 10ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. கவிஞர் சு. வில்வரெத்தினம் நினைவாக நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் சு. வி யைக் கண்டடைதல் என்ற தலைப்பில் கவிஞர் கருணாகரன் சிறப்புரை ஆற்றவுள்ளார். வேறு பல கவித்துறை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. அனைவரும் தவறாது வருகைதரவும்.

புதிய மலையகம்,
தேசிய கலை இலக்கியப் பேரவை இணைந்து வெளியிடும்
பாடல்கள் ஒலிப்பேழை




"காலம் மாறுது"

வெளியீடு : 18-12-2011 - பி. ப 5 மணிக்கு

கைலாசபதி கேட்போர் கூடம்
தேசிய கலை இலக்கியப் பேரவை, 571/15. காலி வீதி, வெள்ளவத்தை

## வலை

### முல்லைப் பெரியாறு: காங் எ பா.ஜ.க எ சி.பி.எம் கும்பல்களை முறியடிப்போம்!

தற்போது எழுந்திருக்கும் முல்லைப்பெரியாறு சிக்கலில், வீணான இனவாத அரசியலுக்குள் சிக்குப்படாமல் எதிரிகள் யார் எனச் சரியாக இனங்கண்டு அவர்களைத் தனிமைப்படுத்துவது பற்றிப் பேசுகிறது இக்கட்டுரை

இலகு முகவரி : **valai.thulaa.net/51**
http://www.vinavu.com/2011/12/05/mullai-periyar-dam/

### Richard Stallman - Facebook and Google+ Mistreat Their Users

*Richard Stallman explains Free Software Movement's stand on current tech issues like Social networking, Software patent, Anonymous DDOS attacks and Pirate party.*

இலகு முகவரி : **valai.thulaa.net/52**
http://www.youtube.com/watch?v=ymuqUJ3MsEs

### Rajaraja Samadhi - dilapidated condition

ராஜ ராஜ சோழன் சமாதி பற்றிய சிறு ஆவணப்படம்.

இலகு முகவரி : **valai.thulaa.net/53**
http://www.youtube.com/watch?v=0GqmsZIwNkY

### இந்துக்களின் தாயகம் சீனாவில் உள்ளது!

இந்து மத நம்பிக்கையாளர்கள் புனிதமாகக் கருதும், "ஸ்வாஸ்திகா, தாமரை மலர், தர்ம சக்கரம்" போன்ற குறியீடுகள் திபெத்தில் தான் தோன்றின. இந்த உண்மை பெரும்பாலான இந்துக்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. "ஒரு இனத்தின் பூர்வீகத்துடன் சம்பந்தப்பட்ட குறியீடுகள்", இவ்வாறு தான் மதச் சின்னங்களாக மாறின.

இலகு முகவரி : **valai.thulaa.net/54**
http://kalaiy.blogspot.com/2011/11/blog-post_27.html

### I Am The Real Desh Bhakt

*With unmistakable pride, he says he's India's Most Wanted Number 2. CPI(Maoist) Politburo member Mallojula Koteshwar Rao alias Kishenji, 53, grew up in the interiors of Andhra Pradesh reading Gandhi and Tagore. It was after understanding the history of the world, he says, that he disappeared into the jungles for a revolution. During search operations in 1982, the police broke down his home in Peddapalli village. He hasn't seen his mother since, but writes to her through Telugu newspapers. After 20 years in the Naxal belt of Maharashtra and Chhattisgarh, he relocated to West Bengal. His wife oversees Maoist operations in Dantewada. Now, at a hideout barely a few kilometres from a police camp in Lalgarh, he reads 15 newspapers daily and offers to fax you his party literature. If you hold on, he'll look up the statistics of war on his computer. Excerpts from a midnight phone interview:*

இலகு முகவரி : **valai.thulaa.net/55**
http://www.tehelka.com/story_main43.asp?filename=Ne211109i_am.asp

### அம்பேத்கார் அடக்கி-ஒடுக்கப்பட்ட தலித்மக்களின் விடுதலைப்போராளி

அம்பேத்காரின் சுருக்கமான வாழ்க்கைக்குறிப்பு.

இலகு முகவரி : **valai.thulaa.net/56**
http://www.ndpfront.com/?p=4798

### அமெரிக்கா, தன் சொந்த நாட்டு மக்களின் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டே அடக்குகிறது!

மக்களுடைய போராட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று உலக நாடுகளுக்கெல்லாம் அறிவுறுத்திக்கொண்டே அந்நாடுகளுக்குள் மூக்கைநுழைக்கும் அமெரிக்கா, தன் சொந்த நாட்டு மக்களின் கோரிக்கைகளையும் போராட்டங்களையும் இரும்புக்கரம் கொண்டே அடக்குகிறது. இதனை விளக்கும் ஆவணப்படமொன்று.

இலகு முகவரி : **valai.thulaa.net/57**
http://www.ndpfront.com/?p=27146

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.